| நம்மையும் நாட்டுமக்களையும் காப்போம் | தொற்றிலிருந்துதமிழகத்தைமீட்போம் |
|---|---|

செ.வெ.எண்:19 நாள்:15.06.2021

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கொரோனா நிவாரண உதவித்தொகைகளாக அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.228.86 கோடி வழங்கப்பட்டுள்ளது.*

*மாவட்டஆட்சித்தலைவர்*
*டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப.,அவர்கள் தகவல்.*

---

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் சட்டமன்ற தொகுதி, ஓசூர் ஊராட்சி ஒன்றியம், தொரப்பள்ளி அக்ரஹாரம் ஊராட்சி, குடிசாதனப்பள்ளி நியாயவிலைகடையில் இன்று (15.06.2021) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஒய்.பிரகாஷ் (ஓசூர்) மற்றும் திரு.டி.மதியழகன் (பர்கூர்) ஆகியோர் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் கொரோனா நிவாரண உதவித்தொகை இரண்டாம் தவணை ரூ.2,000 மற்றும் 14 வகையான அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு ஆகியவற்றை அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கினார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் பேசியதாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மக்களின் துன்பங்களைப் போக்குவதற்கும், அவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையிலும், அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் கொரோனா பாதிப்பு நிவாரண உதவித்தொகை ரூ.4,000 வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அதன்படி, 10.05.2021 மற்றும் 03.06.2021 ஆகிய இரண்டு நாட்களில் சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இரண்டு கட்டங்களாக பயனாளிகளுக்கு கொரோனா பாதிப்பு நிவாரண உதவித்தொகை தலா ரூ.2,000 வீதம் ரூ.4,000 வழங்கி திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா முழு ஊரடங்கு காலங்களில் மக்களின் வாழ்வாதரத்தை கருத்தில் கொண்டு அவர்களுக்கு உதவிடும் வகையில் அனைத்து அரசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் 14 வகையான மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்படும் என அறிவித்திருந்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 03.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில் 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினை பயனாளிகளுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்.

அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 15.05.2021 அன்று 1,058 நியாயவிலைகடைகள் மூலம் 4,79,951 அரிசி குடும்ப அட்டைகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழகம் சார்பாக இயங்கி வரும் 36 நியாய விலைக்கடைகள் மூலம் 36,458 அரிசி குடும்ப அட்டைகள் மற்றும் 320 இலங்கை அகதிகள் என மொத்தம் 1,094 நியாய விலைக்கடைகள் மூலம் 5,16,729 அரிசி குடும்ப அட்டைதாரர்கள் ரூ.103.35 கோடி கொரோனா பாதுகாப்பு நிவாரண உதவித்தொகை முதல் தவணையாக வழங்கப்பட்டது.

தொடர்ந்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இன்று 15.06.2021 முதல் 1,058 நியாயவிலைகடைகள் மூலம் 4,85,766 அரிசி குடும்ப அட்டைகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் சார்பாக இயங்கி வரும் 36 நியாய விலைக்கடைகள் மூலம் 36,893 அரிசி குடும்ப அட்டைகள் மற்றும் 320 இலங்கை அகதிகள் என மொத்தம் 1,094 நியாய விலைக்கடைகள் மூலம் 5,22,979 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.104.59 கோடி கொரோனா நிவாரண உதவித்தொகை இரண்டாம் தவணையாக வழங்கப்பட உள்ளது.

மேலும், ரூ.20.92 கோடி மதிப்பீட்டில் 14 வகையான அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய தொகுப்புகளான 1 கிலோ கோதுமை மாவு, 1 கிலோ உப்பு, 1 கிலோ ரவை, ½ கிலோ சர்க்கரை, 500 கிராம் உளுத்தம் பருப்பு, 250 கிராம் புளி, 250 கிராம் கடலை பருப்பு, 100 கிராம் கடுகு, 100 கிராம் சீரகம், 100 கிராம் மஞ்சள் தூள், 100 கிராம் மிளகாய் தூள், 200 கிராம் டீ தூள், குளியல் சோப்பு மற்றும் துணி சோப்பு வழங்கப்படவுள்ளது.

அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரூ.207.94 கோடி மதிப்பீட்டில் கொரோனா நிவாரண உதவித்தொகை மற்றும் ரூ.20.92 கோடி மதிப்பீட்டில் 14 வகையான அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு என மொத்தம் ரூ.228.86 கோடி மதிப்பீட்டில் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண உதவிகள் வழங்கப்பட உள்ளது.

எனவே, பொதுமக்கள் அனைவரும் தங்களுக்கு வழங்கப்பட்ட டோக்கன்களில் குறிப்பிட்டுள்ள நாள் மற்றும் நேரத்தில் மட்டுமே நியாய விலைக்கடைகளுக்கு கொரோனா நிவாரண உதவித்தொகை பெற செல்லும் பொழுது முககவசம் அணிந்து, சமூக இடைவெளியை கடைபிடித்து தவணைத் தொகையை பெற்றுக் கொள்ளவேண்டும். அடிக்கடி சோப்பு / கிருமிநாசினி கொண்டு கைகளை நன்கு கழுவி தன் சுத்தத்தை மேற்கொள்ள வேண்டும். எனவே, பொதுமக்கள் அனைவரும் கொரோனா நிவாரண உதவித் தொகை மற்றும் 14 வகையான மளிகைப் பொருட்களைப் பெற்று ஊரடங்கு காலத்தில் தேவையான வற்றிற்கு மட்டும் வீட்டின் அருகாமையில் உள்ள கடைகளில் பொருட்களை பெற்று கொள்ளவேண்டும். தேவையில்லாமல் நீண்ட துரம் வெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப.,அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி.நா.மணிமேகலை நாகராஜ், ஊராட்சி மன்ற தலைவர் (தொரப்பள்ளி அக்ரஹாரம்) திருமதி.வி.சாந்தம்மா, ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் திருமதி.ஆர்.உமா, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க தலைவர் திரு.வி.கிருஷ்ணமூர்த்தி, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணை பதிவாளர் திரு.மா.சந்தானம், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.ஜி.கோபு, வட்டாட்சியர் திரு.செந்தில் (ஓசூர்) மற்றும் துணைப்பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) திரு.டி.ஆர்.ராஜதுரை உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**

| | |
|---|---|
| **முககவசம் அணிவீர்** | **தனிமனித இடைவெளிகடைப்பிடிப்போம்** |